**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons),**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**
**2025– ம் ஆண்டு நவம்பர் மாதம் 17–ம் நாள் திங்கள்கிழமை**

**IA No.8/2025**
**in**
**OS no.7/2023**
**---**

1. ரா.ஈஸ்வரன்
2. ரா. ராஜாஜி
3. ரா. ராஜபாண்டி

.....மனுதாரர்கள்/வாதிகள்

**/எதிர்/**

க. செல்வி .....எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு என் முன்பாக 10.11.2025–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருSPT.சேதுராமச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சுப்பராயன் அவர்கள் ஆஜராகியும் ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் உள்ள திருமண பதிவேட்டில் 14.09.1969ம் தேதியில் ஆதிமூலத் தேவர் மகள் பிச்சைமுத்து என்பவருக்கும் சி.வ.வீ. கருப்பையா சேர்வைக்கும் திருமணம் நடைபெற்ற பதிவை மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலின் இணை ஆணையர் அவர்களை சமூகம் நீதிமன்றத்திற்கு வரவழைத்து சாட்சியம் அளிக்க அனுமதியளித்து உத்தரவிட சி.ஆர்.பி ரூ.75 மற்றும் சி.பி.சி. செக்ஷன் 151–ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு மனுவின் சுருக்கம்:**

வழக்கில் பிரதிவாதியின் தந்தையான சி.வ.வீ. கருப்பையா சேர்வைக்கும் ஆதிமூலம் சேர்வை மகள் பிச்சைமுத்து என்பவருக்கும் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் கடந்த 14.09.1969ம் தேதியில் பதிவுத் திருமணம் நடந்ததாக பிரதிவாதி பிரஸ்தாபித்து வருகிறதாகவும், கடந்த 14.09.1969ம் தேதியில் ஆதிமூலத்தேவர் மகள் பிச்சைமுத்து என்பவருக்கும் சி.வ.வீ. கருப்பையா சேர்வைக்கும் திருமணம் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் நடைபெற்று இருக்கும் பட்சத்தில் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் உள்ள திருமணப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்பதால் மேற்படி அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் திருமண பதிவேட்டில் 14.09.1969ம் தேதியில் ஆதிமூலத் தேவர் மகள் பிச்சைமுத்து என்பவருக்கும் சி.வ.வீ. கருப்பையா சேர்வைக்கும் நடந்த திருமண பதிவையும் சமூகம் நீதிமன்றத்திற்கு வரவழைத்து

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.11.17 16:56:15 +0530

விசாரணை செய்யும் பட்சத்தில் திருமணம் பற்றிய விபரம் சமூகம் நீதிமன்றத்திற்கு தெரிய நேரிடும் என்றும், எனவே மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் உள்ள திருமண பதிவேட்டில் 14.09.1969ம் தேதியில் ஆதிமூலத் தேவர் மகள் பிச்சைமுத்து என்பவருக்கும் சி.வ.வீ. கருப்பையா சேர்வைக்கும் திருமணம் நடைபெற்ற பதிவை மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலின் இணை ஆணையர் அவர்களை சமூகம் நீதிமன்றத்திற்கு வரவழைத்து சாட்சியம் அளிக்க அனுமதியளித்து உத்தரவிட இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு எதிருரை சுருக்கம்:–</u>**

வழக்கில் வாதி, பிரதிவாதி தரப்பு விசாரணைகள் அனைத்தும் முடிவடைந்து வாதுரைக்காக வாய்தா கடந்த 23.10.2025ம் தேதி ஏற்பட்டிருந்த நிலையில், 2ம் மனுதாரர்/2ம் வாத வழக்கை இழுத்தடிக்க வேண்டுமென்ற கெட்ட உள்நோக்கத்தோடு சி.ஆர்.பி. ரூல் 75 மற்றும் சி.பி.சி பிரிவு 151–ன் படி இடைக்கால மனுவை (reopen) தாக்கல் செய்துள்ளதாகவும், தனக்கும் வாதிகளின் தந்தை சி.ரா.ராமுத்தேவருக்கும் இடையே மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS No.32/1999 வழக்கு நடைபெற்றது என்றும், இவ்வழக்கில் தனது தந்தை சி.வா.வீ.கருப்பையா நீதிமன்றத்தில் பிரதிவாதி தரப்பு சாட்சியாக நீதிமன்ற கூண்டில் ஏறி மேற்படி தனது தந்தைக்கும் தனது தாயார் பிச்சைமுத்துவிற்கு கடந்த 14.09.1969ல் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் பதிவு திருமணம் நடைபெற்றதற்கான சான்றிட்ட நகலை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சான்றாவணம் Ex.X1 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வாணம் இந்திய சாட்சிய சட்டம் 75ம் பிரிவின் கீழ் வரக்கூடிய பொது ஆவணம் (Public document) என்றும், வாதிகளின் வாதம் மேற்படி பிச்சைமுத்து 1965ல் இறந்துவிட்டார் என்பதும் அவருக்கு பிறந்த குழந்தை கழுங்காயி 1968–ல் இறந்துவிட்டார் என்பது வாதமாகும் என்றும், இவ்வாதத்தை நிரூபிக்க வாதிகள் தரப்பில் எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும், தனது தாயார் பிச்சைமுத்துவிற்கும், தனது தந்தை சி.வா.வீ.கருப்பையாவிற்கும் திருமணமே 14.09.1969ல் தான் நடந்தது என்று மேற்படி திருமணத்தின் சான்றாவணத்தின் மூலம் நிருபணம் ஆகிறது இதனால் வாதியின் வாதங்களை நிராகரித்து மேற்படி சி.ரா.ஆதிமூலத்தேவரின் ஒரே மகள் பிச்சைமுத்து, மேற்படி பிச்சைமுத்துவின் மகள் பிரதிவாதி செல்வி ஆகிய நான் தான் என்று உறுதி செய்து கடந்த 24.02.2005ல் தீர்ப்பளித்தது என்றும், இம்முதலாம் மேல்முறையிட்டு தீர்ப்பினை எதிர்த்து இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கை வாதிகளின் தந்தை சி.ரா.ராமுத்தேவர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கினை தாக்கல் செய்ததாகவும், வழக்கு எண்கள் SA(MD)No.27/2006 மற்றும் SA(MD)No.918/2006 ஆகிய இரண்டு வழக்கும் மேற்படி உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தபோது வழக்கின் வாதிகளின் தந்தை கடந்த 22.12.2008ல் இறந்துவிட்டதால் வழக்கின் 1, 2, 3 வாதிகள் அவசிய தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கினை விசாரித்த மாண்புமிகு உயர்நீதிமன்றம் மேற்படி வாதிகளின் இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கை தள்ளுபடி செய்து சி.ரா.ஆதிமூலத்தேவரின் வாரிசு அவருடைய ஒரே மகள் பிச்சைமுத்துவின் வாரிசு பிரதிவாதி க.செல்வி ஆகிய நான் தான் என்று தீர்ப்பு கூறி வாதிகளின் இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கினை கடந்த 04.04.2014ல் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது என்றும், மேலும் தனது தந்தையின் இரண்டாம் தாரத்தின் பிச்சையம்மாளின் மகனும் தனக்கு சகோதரருமான வழக்கறிஞர் க.கோபாலுக்கும் வழக்கின் 2, 3 வாதிகளுக்கிடையே மானாமதுரை மாவட்ட கூடுதல் உரிமையியல்

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2025.11.17 16:56:22 +0530

நீதிமன்றத்தில் OS.16/13 என்ற வழக்கு நடைபெற்றது என்றும், மேற்படி வழக்கிலும் கருப்பையா சேர்வை மற்றும் சி.ரா.ஆதிமூலத்தேவர் மகள் பிச்சைமுத்து ஆகியோரின் வாரிசு பிரதிவாதி க.செல்வி ஆகிய நான் தான் என்று கடந்த 29.10.2015ல் தீர்ப்பாகியுள்ளது என்றும், இத்தீர்ப்பை எதிர்த்து வழக்கின் 2, 3 வாதிகள் மானாமதுரை சார்பு நீதிமன்றத்தில் முதலாம் மேல்முறையீட்டு வழக்கான AS No.138/2019 என தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி மேல்முறையிட்டு வழக்கிலும் சி.ரா.ஆதிமூலத்தேவர் மற்றும் பிச்சைமுத்து அம்மாள் ஆகியோரின் ஒரே வாரிசு பிரதிவாதி செல்வி ஆகிய நான் தான் என்று கூறி மேற்படி மேல்முறையிட்டு வழக்கை கடந்த 17.11.2022ல் தள்ளுபடி செய்து மாண்புமிகு சார்பு நீதிமன்றம் தீர்ப்பளித்தது என்றும், கடந்த 08.08.1974ல் கீழராங்கியம் காலனி ஆதி மனைவி ராசம்மாளுக்கு பிரதிவாதியின் தாய்வழி தாத்தா மேற்படி சி.ரா.ஆதிமூலத்தேவர் எழுதிக்கொடுத்த பதிவு கிரைய பத்திரத்தில் தனது மகள் பிச்சைமுத்துவிற்கு மகளும் தனக்கு மகள் வழிப்பேத்தியுமான செல்வி என்ற கழுங்காயிக்கு கார்டியனாக எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரம் என்று எழுதிக்கொடுத்துள்ளதாகவும், கிரைய ஆவணம் திருப்புவனம் சார்பதிவகம் ஆவண எண்.1760/1974 என்றும், மேலும் தனது தாத்தா சி.ரா.ஆதிமூலத்தேவரின் வாரிசு சான்று பிரதிவாதி தரப்பு சான்றாவணம் 3 ஆக சமூக நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறதாகவும், தனது தாய்வழி பாட்டி பொன்னம்மாள் என்ற இருளாயி வாரிசு சான்றும் பிரதிவாதி தரப்பு சான்றவாணம்4 ஆக சமூக நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறதாகவும், தனது தாயார் பிச்சைமுத்துவின் வாரிசு சான்று பிரதிவாதி தரப்பு சான்றவாணம் 5 ஆக சமூக நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறதாகவும், சி.ரா.ஆதிமூலத்தேவர் மற்றும் அவரது ஒரே மகள் பிச்சைமுத்துவின் வாரிசு தொடர்பாக மேற்படி முன் வழக்கு நடைபெற்று 26 வருடங்களுக்கு பிறகு தற்போது தனது தாயார் பிச்சைமுத்துவிற்கும் தனது தந்தை சி.வா.வீ.கருப்பையாவிற்கும் நடைபெற்ற திருமண பதிவை பற்றி அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலின் இணை ஆணையர் அவர்களை சமூகம் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க மனு செய்திருப்பது ஏற்புடையதல்ல என்றும் இந்நிலையில் தனது தந்தை மேற்படி சி.வா.வீ.கருப்பையா 01.01.2024 அன்று இறந்துவிட்டதாகவும், இச்சூழ்நிலையில் 2ம் மனுதாரர்/2ம் வாதி தாக்கல் செய்துள்ள இந்த இடைக்கால மனுவை ஏற்றுக்கொண்டால் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை அவமதித்ததாக கருதப்படும் என்றும், வழக்கினை காலம் கடத்தவேண்டும், இழுதடிக்க வேண்டும் என்ற கெட்ட உள்நோக்கத்துடன் இடைக்கால மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே இடைக்கால மனுவை தள்ளுபடி செய்து வழக்கினை argument நிலைக்கு கொண்டுவருமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா என்பதே ஆகும்?

4. இருபுறமும் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை.

5. மனுதாரர்கள் தரப்பில் 2ம் மனுதாரர்/2ம் வாதி இந்த நிர் அபிடவிட் மனுவை தாக்கல் செய்துள்ளார். மனு அபிடவிட்டின் 2வது பாராவில் இந்த பிரதிவாதியின் தந்தையான சி.வ.வீ.கருப்பையா சேர்வைக்கும் ஆறுமுகம் சேர்வை மகள் பிச்சைமுத்து என்பவருக்கும் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் கடந்த 14.09.1969ம் தேதியில் பதிவு திருமணம் நடந்ததாக இந்த பிரதிவாதி பிரஸ்தாபித்து

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2025.11.17 16:56:28 +0530

வருவதாகவும், இந்த பிரதிவாதி பிரஸ்தாபித்து வருவது போல் 14.09.1969ம் தேதியில் ஆதிமூலத்தேவர் மகன் பிச்சைமுத்து என்பவருக்கும் சி.வ.வீ.கருப்பையா சேர்வைக்கும் திருமணம் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் நடைபெற்றிருக்கும் பட்சத்தில் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் உள்ள திருமண பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்பதால் மேற்படி அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் திருமண பதிவேட்டில் 14.09.1969ம் தேதியில் ஆதிமூலத்தேவர் மகள் பிச்சைமுத்து என்பவருக்கும் சி.வ.வீ.கருப்பையா சேர்வைக்கும் நடந்த திருமண பதிவையும் சமூக நீதிமன்றத்திற்கு வரவழைத்து விசாரணை செய்யும் பட்சத்தில் திருமணம் பற்றிய விபரம் சமூக நீதிமன்றத்திற்கு தெரிய நேரிடும் ஆதலால் 14.09.1969ம் தேதியில் ஆதிமூலத்தேவர் மகள் பிச்சைமுத்து என்பவருக்கும் சி.வ.வீ. கருப்பையா சேர்வைக்கும் திருமணம் நடைப்பெற்ற பதிவை மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலின் இணைய ஆணையர் அவர்களை சமூக நீதிமன்றத்திற்கு வரவழைத்து சாட்சியம் அளிக்க உத்தரவிட வேண்டி இந்த நிர் மனு தாக்கல் செய்திருப்பதாக மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

6. மாறாக, எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் உபயதரப்பினர்களுக்கும் அவருடைய முன்னோர்களுக்கும் இடையே நடைபெற்ற வழக்கு விவரம் பற்றியும் அதில் இந்த எதிர்மனுதாரரின் தகப்பனார் சி.வ.வீ.கருப்பையா பிரதிவாதி தரப்பு சாட்சியாக நீதிமன்ற கூண்டில் ஏறி மேற்படி எதிர்மனுதாரரின் தந்தைக்கும் தாயார் பிச்சைமுத்துவிற்கும் கடந்த 14.09.1969ம் தேதியில் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் பதிவு திருமணம் நடைபெற்றதற்கான சான்றிட்ட நகலை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சான்றாவணம் Exhibit X1ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி ஆவணம் பிரிவு 75 இந்திய சாட்சிய சட்டத்தின் கீழ் ஒரு பொது ஆவணம் ஆகும் என்றும், வாதிகளின் வாதம் மேற்படி பிச்சைமுத்து 1965ல் இறந்துவிட்டதாகவும், அவருக்கு பிறந்த குழந்தை கழுங்காயி 1968ல் இறந்துவிட்டார் என்பது ஆகும் என்றும், மேற்படி வாதத்தை நிரூபிக்க வாதிகள் தரப்பில் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லையென்றும், எதிர்மனுதாரரின் தாயார் பிச்சைமுத்துவிற்கும் தந்தை சி.வ.வீ.கருப்பையாவிற்கும் திருமணமே 14.09.1969ல் தான் நடந்தது என்று மேற்படி திருமணத்தின் சான்றவாணம் மூலம் நிரூபணமாகிறது என்றும், மேற்படி வாதிகளின் வாதங்களை நிராகரித்து சி.ரா.ஆதிமூலத்தேவரின் ஒரே மகள் பிச்சைமுத்து என்றும், மேற்படி பிச்சைமுத்துவின் மகள் பிரதிவாதி செல்வியாகிய நான் தான் வாரிசு என்று சமூக நீதிமன்றம் 31.01.2002ல் தீர்ப்பளித்தது என்றும், அதனை எதிர்த்து வாதிகளின் தந்தை சி.ரா.ராமத்தேவர் சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த முதலாம் மேற்முறையீடு வழக்கு எண் AS No.64/2002ம் தள்ளுபடி செய்யப்பட்டு மேற்படி சி.ரா.ஆதிமூலம் மகள் பிச்சைமுத்துவின் வாரிசு பிரதிவாதி செல்வியாகிய நான் தான் என்று உறுதி செய்தது என்றும், மேற்படி முதலாம் மேல்முறையீட்டு தீர்ப்பினை எதிர்த்து இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கை மேற்படி வாதிகளின் தந்தை சி.ரா.ராமுத்தேவர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் 2ம் மேல்முறையீட்டு வழக்கினை தாக்கல் செய்தார் என்றும், இவ்வழக்கு எண்கள் SA (MD) No.27/2006 மற்றும் SA (MD) No.918/2006 ஆகிய 2 வழக்கும் மேற்படி வாதிகளின் 2 மேல்முறையீட்டு வழக்குகளை தள்ளுபடி செய்து சி.ரா.ஆதிமூலத்தேவரின் வாரிசு அவருடைய ஒரே மகள் பிச்சைமுத்து என்றும், பிச்சைமுத்துவின் வாரிசு பிரதிவாதி கா.செல்வியாகிய இந்த பிரதிவாதி என்றும், தீர்ப்பு கூறி வாதிகளின் 2ம் மேல்முறையீட்டு வழக்கும் தள்ளுபடி செய்து

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2025.11.17 16:56:35 +0530

உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், எதிர்மனுதாரரின் தாயார் பிச்சைமுத்துவின் வாரிசு சான்றிதழை பிரதிவாதி தரப்பு சான்றவணமாக தாக்கல் செய்திருப்பதாகவும், மேற்படி வாரிசு சான்றிதழில் ஏதேனும் தவறுகளோ மேசடிகளோ நடைபெற்றிருப்பதாக வாதிகளுக்கு தெரிய வரும் பட்சத்தில் வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்து நிவாரணம் தேடிக்கொள்ளலாம் என்றும், மேற்படி முன்வழக்கு நடைபெற்று 26 ஆண்டுகள் கழித்து எதிர்மனுதாரரின் தாயார் பிச்சைமுத்துவிற்கும் தந்தை சி.வ.வீ.கருப்பையாவிற்கும் நடைபெற்ற திருமணத்தின் பதிவு பற்றி அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலின் இணை ஆணையர் அவர்களை சமூக நீதிமனறத்திற்கு சாட்சியம் அளிக்க மனு செய்திருப்பது ஏற்புடையதல்ல என்றும், இம்மனுவை அனுமதிக்கும் பட்சத்தில் முன் தீர்ப்பு தடை தோசத்தின் அடிப்படையில் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை அவமதிப்பதாக கருதப்படும் என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்யக்கோரி எதிர்மனுதாரர் தரப்பில் வாதுரை எடுத்துரைக்கப்பட்டது.

7. மனுதாரர் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் நடைபெற்ற 14.09.1969ம் தேதிய கருப்பையா சேர்வை மற்றும் பிச்சைமுத்துவின் திருமண பதிவுகளை கொண்டுவந்து சாட்சியம் அளிக்க மனு செய்துள்ள நிலையில், எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்கனவே முன் தீர்ப்பில் கருப்பையா சேர்வை மற்றும் பிச்சைமுத்துவின் வாரிசு இந்த நிர் பிரதிவாதி தான் என தீர்ப்பாகி மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வரை தீர்ப்பும் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அதன் அடிப்படையில் இந்த நிர் மனுவை அனுமதித்தால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் தீர்ப்பை அவமதித்தாக ஆகிவிடும் என்றும், இந்த நிர் மனுவும் முன் தீர்ப்பு தடை தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வாதம் எடுத்துரைத்த நிலையில், மனுதாரர்கள் தரப்பில் இந்த நிர் மனுவை 2ம் மனுதாரர்/2ம் வாதி மேற்படி கருப்பையா சேர்வை பிச்சைமுத்துவிற்கு நடைபெற்ற திருமணத்தின் பதிவுகள் அடங்கிய ஆவணங்களோடு மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலின் இணை ஆணையரை சாட்சியம் அளிக்க ஏதுவாக வரவழைக்க உத்தரவிட வேண்டி இந்த நிர் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. மனுதாரர்கள்/வாதிகளுக்கு சாட்சி விசாரிக்க ஒரு வாய்ப்பளிக்கும் விதமாக இந்த நிர் மனு அனுமதிக்கவேண்டியது அவசியமென்றும் மேற்படி ஆவணங்களை வரவழைப்பதனால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் தீர்ப்பை அவமதித்ததாக ஆகிவிடும் என்ற எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் வாதத்தை நிராகரித்து மனுவை அனுமதிக்கவேண்டியது அவசியமென இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கோரியுள்ள சி.வ.வீ.கருப்பையா சேர்வைக்கும், பிச்சைமுத்துவிற்கும் நடைபெற்ற திருமண பதிவை மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் இணை ஆணையர் மூலம் ஆவணங்களை வரவழைத்து சாட்சியம் அளிக்க ஏதுவாக மனுதாரர்களின் மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. மனுதாரர்கள் தரப்பில் ஒரு வார காலத்திற்குள் மேற்படி திருக்கோவில் இணை ஆணையருக்கு சம்மன் படி கட்டி சாட்சியை வரவழைத்து மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சியத்தை விரைந்து முடிக்க அறிவுறுத்தப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2025.11.17 16:56:42 +0530

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025–ம் வருடம் நவம்பர் மாதம் 17–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.11.17 16:56:50 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

| |
|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:இல்லை |

| |
|---|
| எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:இல்லை |

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.11.17 16:56:54 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை**
**நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**
**IA No.8/2025**
**in**
**OS no.7/2023**
**உத்தரவு**
**நாள்:17.11.2025**